Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.389/2025

Dated 23-02-2026
Deposition of witness for : PW 17

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | P.ஜெகதீசன் | வயது | : | 58 |
| தந்தை பெயர் | : | J.பஞ்சநதம் | தாலுக்கா | : | திருச்சி |
| கிராமம் | : | திருச்சி | தொழில் | : | காவல் ஆய்வாளர் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused present**

Ld.D **Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது அரியலூர் மாவட்டம் மீன்சுருட்டி காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2) கடந்த 6.7.2025 அன்று தஞ்சாவூர் தெற்கு காவல்நிலையத்தில் 22.30 மணிக்கு உதவி ஆய்வாளர் பதிவு செய்த கு.எண்.146/2025 சட்டப்பிரிவு 103BNS ன்படி முதல் தகவல்

அறிக்கையை அன்று நான் விடுப்பில் இருந்ததால் அன்று அந்த காவல்நிலைய பொறுப்பு ஆய்வாளராக இருந்த திருமதி சுதா மகளிர் காவல்நிலையம் அவர்கள் வழக்கினை எடுத்துகொண்டு சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தும்மற்ற சாட்சிகளை விசாரணை செய்தும், சம்பவ இடத்தில் இருந்து ரத்தம் பட்ட மண், ரத்தம் படாத மண் ஆகியவைகளை சேகரித்தும் ஆரம்பகால கட்ட விசாரரணையை செய்திருந்தார்.

3) மறுநாள் காலை 7.7.2025 அன்று நான் விடுப்பில் இருந்து பணிக்கு வந்துவிட்டேன். அன்றைய தினமே அந்த புலன் விசாரணை கோப்பை எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் துரைமுருகன், கார்த்திக், ஜெயகுமார், மோனிஸ்கன்னா, ஸ்ரீராம் ஆகியோர்களை விசாரரணை செய்தததில் மேற்படி காவல் ஆய்வாளரிடம் சொன்ன வாக்குமூலத்தையே என்னிடமும் சொன்னதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

4) பின்பு தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனை சவகிடங்கிற்கு சென்று 12 மணி முதல் 14 மணி வரை சவகிடங்கில் இருந்த இறந்துபோன திருவேங்கடம் பிரேதத்தை பஞ்சாயத்தார்கள் கணேஷ், செல்வராஜ், சேகர், நந்தபாலன், கலியபெருமாள் மற்றும் சாட்சிகள் தனராஜ், விஜய், வினோத்குமார்,கவிதா ஆகியோர்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.20 ஆகும். பிறகு அந்த பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை

செய்வதற்கான வேண்டுகோள் கடிதத்தை த.கா. சிவபாதசேகரன் அவர்களிடம் கொடுத்து உடற்கூராய்வு மருத்துவரிடம் பிரேத பரிசோதனை செய்வதற்காக கொடுத்து அனுப்பினேன்.

5) மேற்படி மருத்துவர் அன்றே உடற்கூராய்வு பணியை முடித்து திருவேங்கடம் என்ற பிரேத்தில் இருந்து சேகரிக்கப்பட்ட உடைமைகளான டார்க் கலர் சிமெண்ட் பேண்ட் ஒன்று, சிமெண்ட் கலர் கோடுபோட்ட முழுக்கை சட்டை ஒன்று, மெருன் கலர் ஜட்டி ஒன்று ஆகியவற்றை தனி அறிக்கை மூலம் காவலர் எங்கள் நிலையத்தில் ஒப்படைத்தார். நான் அவைகளை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.21** ஆகும். டார்க் கலர் சிமெண்ட் பேண்ட் இதுதான். அது **சா.பொ.3** , சிமெண்ட் கலர் கோடுபோட்ட முழுக்கை சட்டை ஒன்று இதுதான். அது **சா.பொ.4** , மெருன் கலர் ஜட்டி ஒன்று இதுதான் அது **சா.பொ.5**

6) அன்றே மேற்படி காவலர் திருவேங்கடம் பிரேதத்தை உடற்கூராய்வு முடிந்த பிறகு அதன் உறவினர்களிடம் ஒப்படைத்தார். எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி பாலாஜி நகர் ஒயின்சாப் அருகே இந்த வழக்கின் எதிரி அறிவழகன் இருப்பதை அறிந்து அங்கு 16.00 மணிக்கு சென்றேன். அங்கு அறிவழகனை சாட்சிகள் சிவகுமார், நந்தபாலன் ஆகியோர்கள் முன்னிலையில் கைது செய்தேன்.

7) அப்போது அவர் தாமாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்.அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை அன்றே மாலை 16.15 மணி முதல் 17.15 மணி வரை சாட்சிகள் சிவகுமார்,

நந்தபாலன் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்தேன்.

8) அந்த வாக்குமூலத்தில் கனபதி நகர் முட்புதற் அருகே ரீப்பர் கட்டையையும் தான்அணிந்திருந்த பேண்ட் சட்டைகளை மறைத்து வைத்திருப்பதாகவும் தன்னை அழைத்து சென்றால் எடுத்து தருவதாகவும் கூறினார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி இதுதான்.அது **அ.சா.ஆ.22** ஆகும்.

9) அதன்படி எதிரியையும் மேற்படி சாட்சிகளையும் தஞ்சாவூர் கனபதி நகரில் உள்ள செல்வராஜ் பள்ளிக்கு அருகில் உள்ள முட்புதரில் இருந்து எடுத்து ஆஜர் செய்த மேற்படி சான்று பொருட்களை அதே சாட்சிகள் முன்பு மகஜரில் கைப்பற்றினேன். அந்த மகஜர் இதுதான். அது **அ.சா.ஆ.23**, அந்த பேண்ட் இதுதான்.அது **சா.பொ.6**, சட்டை இதுதான். அது **அ.சா.பொ.7**, மர ரீப்பர் இதுதான். அது **அ.சா.பொ.8** ஆகும். மேலும் அந்த சாட்சிகளின் வாக்குமூலங்களை பதிவு செய்தேன்.

10) பிறகுஅந்த பொருட்களையும் எதிரியையும்அழைத்து கொண்டு காவல்நிலையம் வந்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு அன்றே அனுப்பி வைத்தேன். கைப்பற்றிய தடய சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அதே தேதியில் அனுப்பி வைத்தேன்.அந்த படிவம் 91 இதுதான்.அது **அ.சா.ஆ.24** ஆகும்.

11) 8.7.2025 அன்று இறந்துபோன திருவேங்கடம் பிரேதத்தின்மீது பிரேத விசாரணை சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். பிறகு துரைமுருகன், தனராஜன் ஆகியோர்களை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு சாட்சிகள்

மகாலட்சுமி, மணிகண்டன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

12) பிறகு உடற்கூராய்வு செய்த மருத்துவர் திரு பாலமுரளி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும் அவரிடம் இருந்து அறிக்கை பெற்றேன். பிறகு சாட்சிகள் விஜயா, ஜெயா, காவலர் நவீன், ஜோதி மணி, சிவபாதசேகர், ராஜ்குமார், கார்த்திகேயன், செந்தமிழ்செல்வன் மற்றும் வழக்கு பதிவு செய்த ரவிச்சந்திரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

13) என் விசாரணை முடித்து எதிரி மீது 1.8.2025 அன்று சட்டப்பிரிவு 103 (1)BNS ன்படி இறுதி குற்ற அறிக்கை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

என் விசாரணையின்போது அ.சா.2,5,7,8 சாட்சிகள் 180 BNSS வாக்குமூலத்தில் சொல்லி உள்ளபடியே என் விசாரணையிலும் சொல்லி உள்ளார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1) முதல் விசாரணையில் சொன்னதுபோல் நான் சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

2) நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றும் அவர் எந்த ஒப்புதல வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் அதன்படி அவர் எந்த சான்று பொருட்களும் எடுத்து ஆஜர் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

3) தடய பொருட்கள் மற்றும் ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார்

செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

4) எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

5) சரியாக புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது ஒரு பொய்யான குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/ P.வேல்முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்